# Battle Of Vanni

## வன்னியின் பெரும்போர்

### கிளி – முல்லை நட்புக்கிண்ண துடுப்பாட்டப் போட்டி




**Kn/Kilinochchi Maha Vidyalayam** Vs **Mu/Puthukkudiyiruppu Central College**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்




முல்/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

காலம் : 16,17 -01.2022

இடம் : கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பின் சின்னம்

கிளிநொச்சி -முல்லைத்தீவு மாவட்டங்களின் பாடசாலைப் போட்டியாக வருடாந்தம் நடைபெறும் போட்டியின் மற்றுமொரு போட்டிக்கு 2022 இல் வாழ்த்துத் தெரிவிப்பதில் நான் நிறைவடைகின்றேன். இரு மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வானது பள்ளிப் பிள்ளைகள் மத்தியில் பெரும் உற்சாகத்தையும், வேறுபாடுகளைக் கடந்து பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாகவும், அதனூடாக உடல் உள உறுதிப்பாட்டுடன், மனமகிழ்வினையூட்டும் செயற்பாடாகவும் அமைந்துள்ளது. நீண்ட கொவிட் கால நெருக்கடிகளைக் கடந்து பரஸ்பரம் போட்டியில் உற்சாகத்துடன் ஈடுபடும் சூழல் உருவாகியுள்ளது.

அது எமது பிள்ளைகளின் உடல் நலனையும், உள உறுதிப்பாட்டையும் கட்டியெழுப்புகிறது. இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டுள்ள கிளிநொச்சி மகா வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டுப் பயிற்றுநர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்தைத் தெரிவிப்பதுடன் தங்கள் முயற்சிக்கு எனது ஆசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

திருமதி. றூபவதி கேதீஸ்வரன்
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



மாணவர்களின் கற்றல் மற்றும் கல்விசார் தொழில்ப்பாடுகள் அவர்களின் ஆளுமை விருத்திக்கு அவசியம் ஆகின்றன, கல்விசார் நடவடிக்கைகள் அவர்களின் அறிவு விருத்திக்கு அவசியமாவது போல விளையாட்டுக்கள் அவர்களின் உடல் உள விருத்திக்கு மிக அவசியமாகின்றது. சிறுபராயத்தில் உடற்பயிற்சிகளை செய்யாதவர்களே முதுமையில் பல்வேறு தொற்றா நோய்த்தாக்கங்களிற்கும், மன உளைச்சல்களுக்கும் ஆளாகி அவதியுறுவதைக் காண்கிறோம். எனவே மாணவர்கள் மத்தியில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கிளிநெச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக பாடசாலைகளிற்கு இடையில் நடைபெறும் வன்னிப் பெரும் சமர் எனப்படும் இத் துடுப்பாட்டப் போட்டி ஒரு மாவட்டத்தில் உள்ள வீரர்களை அறிந்து கொள்வதற்கும் அவர்களிடையே நட்புறவை வளர்ப்பதற்கும் மேம்படுத்து வதற்கும் ஒற்றுமை, புரிந்துணர்வு,பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் ஏதுவாக அமையும் என நம்புகின்றேன்.

மேற்படி துடுப்பாட்டப் போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கும் அதையொட்டிய சிறப்பு மலர் சிறப்பான முறையில் மலர்வதற்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நான் மட்டற்ற மனநிறைவடைகிறேன்.

க. விமலநாதன்
அரசாங்க அதிபர்.மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட இணைப்பின் உறவுப் பாலமாக இந்த துடுப்பாட்ட நிகழ்வு சிநேகபூர்வமாக இடம்பெறுவது கண்டு மகிழ்வு அடைகின்றேன்.

கடந்தகாலங்களில் ஏற்பட்ட பலவிதமாக மன அழுத்தங்களுக்கு, இத்தகைய நிகழ்வுகளை பாடசாலைகள் நடாத்துவது ஓரளவேனும் பதில் காணும் என நம்புகின்றேன்.

விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சகோதரத்துவம், பரஸ்பர ஒற்றுமை என்பன அருகிக்கொண்டு செல்லும் எம் சமூகத்தில் மனிதநேயப் பண்புகளை வளர்த்தெடுக்க பாடசாலைகள் முனைப்புக் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

வன்முறைகள் களைந்து அன்புடனும், அறத்துடனும் கூடி வாழ மாணவர்கள் வழிப்படுத்தப்படவேண்டும். வளமும், அறிவாற்றலும் உள்ள சமூகம் மலர "பாடசாலைச் சமூகம்" என்ற பெயரில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் இணைந்து செயற்பட்டு முதன்மைப் பாடசாலைகளாக இந்த இரு பாடசாலைகளையும் இரு மாவட்டங்களிலும் தொடர்ந்து மிளிரச் செய்ய வாழ்த்துக்கள்.

**T.John Quintus**
**Additional Provincial Director Of Education**
**(Edu.Administration)**
**Provincial Dept. of Education**
**Northern Province**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி
# கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்
# எதிர் மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி துடுப்பாட்டச் சமர்)

"வன்னியின் பெரும் போர்" என்று அழைக்கப்படும் கிளி-முல்லை நட்புக்கிண்ண கடினப்பந்து நிகழ்வானது 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நடைபெறுவது சிறப்பம்சமாகும். இவ்வாறான நிகழ்வுகளினூடாக மாணவர்களின் உடல் உள விருத்தி ஆரோக்கியமாக அமைவதுடன், தமது விளையாட்டுத் திறனை சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைகிறது. இந்நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்கள், அதிபர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோருக்கு இறைவனின் நல்லாசிகள் கிடைக்க வேண்டுகின்றேன்.

பாடசாலைகளில் மாணவர்களின் தனித்தனித் திறன்கள் இனங்காணப்பட்டு உயர்கல்வி வாய்ப்புக்கள் மற்றும் தொழிற்கல்விக்கு வழிப்படுத்துதவதற்காக கல்விசார் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கி கற்பித்தல் செயற்பாடு நடைபெறுகின்றது. இவ்வகையில் 2021 ஆம் ஆண்டிற்கான நட்புக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றும், இரு பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்களின் விளையாட்டுத் திறமைகள், நுட்பங்கள் நல்ல முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கல்வி சார் செயற்பாடுகளிலும் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்த சாதனை மட்டத்தினை பெறவேண்டும் எனவும் இறைவனை வேண்டி நல்லாசி தெரிவிப்பதோடு இலங்கையின் தேசிய அணியில் இம் மாணவர்களும் இடம்பெற்று சர்வதேச போட்டிகளிலும் பங்குபெற ஆசீர்வதிக்கின்றேன்.

திரு. பா. வாசுதேவன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி தெற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி



பாடசாலை என்ற சமூக அமைப்பு கல்வியை மட்டும் மையமாகக் கொள்ளாது ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்குவதை தனது பிரதான நோக்கமாகக் கொண்டு இயங்குவதாகும். அதனடிப்படையிலே வடமாகாணத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முதன்மை நிலையில் திகழ்கின்ற கிளி / கிளிநொச்சி ம.வி மற்றும் முல்/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகிய இருபாடசாலைகளும் வருடாவருடம் " வன்னியின் பெரும்போர்" என அழைக்கப்படும் முல்லை-கிளி நட்புக்கிண்ணத் துடுப்பாட்டிப் போட்டியில் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் பெருமையும் கொள்கின்றேன்.

2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்துடுப்பாட்டப்போட்டி இவ்வருடம் (2022) பத்தாவது போட்டியாக நடைபெறவுள்ளது. உலகம் முழுவதும் கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்ட காரணத்தினால் கடந்தவருடம் இப்போட்டியை நடாத்த முடியவில்லை. இதனால் சமூகத்தின் பார்வையில் வெளித்தெரியவேண்டிய சில மாணவர்கள் தமது வாய்ப்பை இழந்மை துரதிஸ்ரமே. எனினும் இவ்வருடம் மீண்டும் இப்போட்டி தனக்கேயுரிய கம்பீரத்துடன் ஆரம்பித்துள்ளமை பல மாணவர்கள் தம்மை வளப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பாக அமையும் என நம்புகின்றேன்.

மனிதன் தன்னுடைய நாகரீகத்தின் உச்சத்தையும் நட்பு, ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, கருணை, கட்டுப்பாடு, அமைதி போன்ற மிகச்சிறந்த பண்புகளையும் வளர்க்க விளையாட்டுக்களே வரலாற்றின் எல்லாக்காலங்களிலும் உதவியுள்ளது. அதனாலேயே நவீன உலகில் விளையாட்டுக்களுக்காக அரசுகளும் பாடசாலை போன்ற நிறுவனங்களிலும் பெரும் இடத்தை வழங்குகின்றன. அதன் அடிப்படையிலேயே எமது பாடசாலையும் இத்துடுப்பாட்டப் போட்டியில் மகிழ்ச்சியுடன் இணைந்துகொள்கின்றது. எனவே இந்நிகழ்வு சிறப்புறவும் இரு மாவட்டங்களின் பெருவளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் இத்துடுப்பாட்டப்போட்டி களம் அமைத்துக்கொடுக்கவும் வாழ்த்துக்களைக் கூறுவதோடு பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம்,
அதிபர்,
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆவது தடவையும் எழுச்சி மிக்க சமர்



வளம் மிக்க வன்னி மண்ணில் விண்ணுயர சாதனைகள் புரியும் மு.புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், கல்வியிலும் இதர துறைகளிலும் சிறந்து விளங்கும் கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயமும் வன்னி பெருச்சமரில் பத்தாவது தடவையில் காலடி எடுத்து வைத்து வீறுநடைபோட்டுக் கொண்டிருப்பதை கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய உலகில் பலகோடிக் கணக்கான இரசிகர்களைக் கவர்ந்து மானிட ஆற்றலை வெளிக்கொணர்ந்து மனிதனது சகலதுறை ஆற்றல்களையும் பரிணமிக்கச் செய்கின்ற இத்துடுப்பாட்டமானது தனக்கென்று தனிமுத்திரை பதித்துள்ளது. உடல், உள உறுதி பயன்மிக்க வகையில் பொழுதை ஆக்குதல், ஆற்றல் வெளிப்பாடு, மகிழ்ச்சி என்பவை மட்டுமன்றி இவ் விளையாட்டின் மூலம் குழுவாக இயங்குதல், வெற்றி, தோல்விகளை சமமாக கருதுதல் போன்ற நற்பண்புகளை பெறுகின்றார்கள். இவ்விளையாட்டில் கொள்ளும் ஈடுபாடும், அயராத முயற்சியும் பயிற்சியும் வீரர்களை சாதனை நாயகர்கள் ஆக்குகின்றது.

எமது கல்லூரியின் துடுப்பாட்ட அணி செழுமையுற முழுமூச்சாக உழைத்த அனைத்து நல்லுள்ளங்களையும் முழுமனதுடன் பாராட்டுகின்றேன். முல்லையும் கிளிநொச்சியும் தமது பராம்பரிய நட்புறவை மேம்படுத்த நிகழ்த்தும் இச் சமரானது வானளாவ உயர்ந்து, தொடர்ந்து பன்னெடுங்காலம் தம் பணியில் உயர எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதில் மனநிறைவு அடைகின்றேன்.

திரு. இராயப்பு- நேவிற்ஜீவராசா,
அதிபர்,
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாறு தந்த மைதானத்தில் வரலாற்றுப் பெருஞ்சமர்

அநேகரது எதிர்பார்ப்புக்களுடன் தனது சொந்த மைதானத்தில் அரங்கேறவுள்ள "வன்னியின் பெரும்போர்" மிகுந்த மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் நிகழ்கின்றது.

கிளி.ம.வியின் மைதானத்தைப் பெற்றுக்கொள்வதில் அயராது உழைத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து நிற்கின்றேன். இப்பெருந் துடுப்பாட்டப் போட்டி கொடிய "கொரோணா" பெருந்தொற்றுக் காரணமாக கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெறமுடியாத இக்கட்டான சூழல் இருந்தபோதும் இம்முறை 2021ஆம் ஆண்டிற்கான போட்டி இவ்வருடமான 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெறுகின்றமை சிறப்பான விடயம். அதேபோல் நிகழ்ந்தேறவும் ஆவலாய் உள்ளோம்.

இப்போட்டி மீளவும் சிறப்பான முறையில் இடம்பெற முக்கிய காரணகர்த்தாக்களாக இருந்து செயற்பட்ட கிளிநொச்சி ம.வியின் பழைய மாணவர்கள் பெரிதும் பாராட்டப்படவேண்டியவர்கள். தாம் கல்வி கற்ற பாடசாலையை எப்படி எப்படி அலங்கரித்துப்பார்க்க வேண்டும் என்ற கனவுடன் ஆவலுடன் அவர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கும் விதம் அனைவருக்குமே முன்மாதிரியாகவுள்ளது. எமக்கான மைதானத்தைப் பெற்றுத்தந்த, அதன் தேவையறிந்து இதனை வழங்க முன்வந்த வல்லமையின் மனதையும் தூரநோக்கு சிந்தனையையும் இவ்வேளை சிரம்தாழ்த்தி நினைவில் கொள்கிறேன் வரலாறுகள் எம்முடன் கூடவே வாழ்கின்றன. அதன் பயனாகவே யாவும் துளிர்கின்றன, சிலிர்க்கின்றன.

"வன்னியின் பெருஞ்சமர்" கிளி -முல்லை நட்புக்கிண்ணம் தங்குதடையின்றி ஆண்டுதோறும் நடைபெற இவ்வேளை அனைவரும் உறுதி எடுத்துக்கொள்வோம். இரு அணி வீரர்களும் சிறப்பான திறமையைக் காட்டி களத்திடையே ஆடிட அன்புரிமையுடன் நல் ஆசிகள் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

திரு.அலன்டீலன்
துடுப்பாட்ட பயிற்றுனர்
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்றுவிப்பாளரின் வாழ்த்துச்செய்தி
# (புது.மத்திய கல்லூரி)



வன்னியின் பெரும் சமர்(Battel of vanni)என வர்ணிக்கப்படும் கிளி - முல்லை நட்புக்கிண்ண துடுப்பாட்ட போட்டியானது பல இன்னல்களுக்கு மத்தியில் கிளிநொச்சி மண்ணில் நடைபெறவுள்ளது. இரு பாடசாலை மாணவர்களையும் வெளி உலகிற்கு அறியத்தரும் ஒரு புகழ்மிக்க போட்டி தொடராகும்.

ஒரு மாணவனின் பாடசாலை செயற்பாடுகளானது தனியே கற்றல் செயற்பாடுகளோடு நின்று விடக்கூடாது. ஆரோக்கியமான மனநிலை , உடல்நிலையை உருவாக்க இணைபாடவிதான செயற்பாடுகளே உதவும்.ஒரு மாணவனின் குழப்பமான மனநிலையை கற்றல் தளங்கள் மாற்றுமோ இல்லையோ கண்டிப்பாக விளையாட்டு மைதானம் மாற்றும் என்று நான் நம்புகின்றேன்

இறுதியாக எனக்கு இந்த பயிற்சியினை வழங்குவதற்கு உதவியாக இருந்த பாடசாலை சமூகத்திற்கும். பயிற்சிக்காலங்களில் மாணவர்களை அனுப்பிவைத்த பெற்றோர்களுக்கும், உறுதுணையாக இருந்த பழைய மாணவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதுடன். இப்போட்டி தொடரில் பங்கு கொள்ளும் இரு பாடசாலை விளையாட்டு வீரர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**A.Rathurjan.**
பயிற்றுவிப்பாளர் .
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.பழைய மாணவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " வன்னியின் பெரும் போர்"



## வரலாற்று அலசல்

வன்னியின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் கிளி - முல்லை நட்புக்கிண்ணத்தை துடுப்பாட்டப்போட்டி வன்னிப்பெருநிலத்தின் முதல்தர பெருந்துடுப்பாட்டப் போட்டியாக விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே. போட்டியின் தரமும் ஒழுங்குபடுத்தலும் , மாணவர்களின் ஆரவாரங்களும் ஆர்ப்பரிப்புக்களும் துடுப்பாட்ட ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களும் திருப்திகளும் ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களின் ஒத்தாசைகளும் தட்டிக்கொடுப்புக்களும் என இருபள்ளிச் சமுகங்களினதும் உறவுப்பாலத்தின் கனதி இப்போட்டியில் மேலோங்கி நிற்பதைக் கண்டு கொள்ள முடியும்.

உயரிய நட்பின் அடையாளமாக கிளிநொச்சி மகா வித்தியாலத்தின் அப்போதைய அதிபரும் தற்போதைய கிளிநொச்சி மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான திரு.சிவஞானம் சிறீதரன் அவர்களின் நேசக்கரத்தை முல்லை/ புதுக்குடியிருப்பின் மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் திரு.சி.சுப்பிரமணியேஸ்வரன் பற்றிக்கொள்ள 2007ஆம் ஆண்டில் முதலாவது வன்னியின் பெரும்போர் என்ற மகுடம் கொண்ட கிளி- முல்லை நட்புக்கிண்ணத் துடுப்பாட்டப்போட்டி அனைவருக்கும் இன்பவிருந்தாய் அமைந்தது.

2007 ஆம் ஆண்டு யூன் 15ஆம் நாள் முதலாவது வன்னியின்பெரும் போர் பெரும் எடுப்பில் மிகச்சிறந்த ஒழுங்குபடுத்தல்களோடு, வல்லவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரது அனுசரணையுடன் நடைபெற ஏற்பாடாகிறது. வெண்கலத்தில் வடித்தெடுத்த வரலாறு சொல்லும் அழகிய வெற்றிக்கிண்ணம் அது. போர் முற்றத்தில் பொறுக்கியெடுத்த வெற்றிக்கோதுகளில் வடித்தெடுத்த வரலாறு கூறும் வடிவமது. ஆசிரியர் செல்லத்துரை விக்கினேஸ்வரநாதன் ( அபிராமி சிற்பாலயம்) அவர்கள் அதனைச் செதுக்கினார். அக்கிண்ணத்தை இரு அணித்தலைவர்களும் தாங்கி மைதானத்தினுள்ளே வந்து வரவேற்புகள் முடிந்து போட்டி தொடங்கவேண்டிய நேரத்தில் மழை பெய்யத்தொடங்கியது. அது கனமழையாக அங்கு கூடியிருந்த அனைவரது கனவுகளும் கலையத் தொடங்கியது. " வீழ்வதல்ல தோல்வி வீழ்ந்தும் எழ முயற்சிக்காமலிருப்பதே தோல்வி" என்ற விடாமுயற்சியின் பயனாக மீண்டும் 23.06.2007 அன்று முதலாவது வன்னியின் பெரும்போர் அதே கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அரங்கேறியது.

பரப்பரப்பான அனல் பறந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது கிளிநொச்சி மகா வித்தியாலயம். தள்ளாடியபோதும் தாக்குப்பிடித்தது புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் வெற்றிக்கனவை தகர்க்க குறுக்கிட்டது. மழை ஒருமணிநேர தாமதத்தின் பின் மீண்டும் போட்டி தொடர்ந்தது. வெற்றிக்குத் தேவையாக மீதம் இருந்த மூன்று இலக்குகளை வீழ்த்திக்கொள்ள அந்த இரண்டாம் நாளில் நேரம் போதவில்லை. கிளிநொச்சி மகாவித்தியாலத்திற்கு போட்டியோ சமநிலை.

இவ்வாறாக கிளி - முல்லை நட்புக்கிண்ணம் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்தால் இன்றுவரை வெற்றிகரமாய் நடைபெற்று வருகின்றது.

2008 ஏப்ரல் 15ஆம், 16 ஆம் நாட்கள் நடைபெற்ற இரண்டாவது "வன்னியின் பெரும்போர்" முல்லை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மைதானத்தில் நிகழ்ந்தேறியது. போட்டி ஏற்பாடுகளும் ஒழுங்குபடுத்தல்களும் மேலோங்கி நிற்க "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுத்தாற்போல் மைதானத்தைச் சூழ ஆரவாரம் செய்த வண்ணம் மாணவர்களும், ஆசிரியர்களும், துடுப்பாட்ட ஆர்வலர்களும் என அனைவருமே போட்டிக்கு உற்சாமளித்தனர். அன்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் மறக்கமுடியாத கனதியான நாட்களாகும். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் ஆதிக்கத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் சிக்கித்திணற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தனது சொந்த மண்ணில் முதலாவது வெற்றியை பெற்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

2009ஆம், 2010ஆம், 2011ஆம், 2012ஆம் ஆண்டுகளில் போட்டிகள் நடைபெறவில்லை. 2008ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வன்னியில் ஆரம்பித்த இடப்பெயர்வுகளும் பேரவலங்களும் அதன் தாக்கங்களும் இப்போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. 2013யூன் 07ஆம், 08ஆம் நாட்களில் போரின் நிறைவின் பின்னரான மூன்றாவது வன்னியின் பெரும்போர் துடுப்பாட்டம் மீண்டும் முல்லை / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

வன்னியின் பெரும்போர் துடுப்பாட்டத்தின் வரலாறு சொல்ல வேண்டிய பழைய வெற்றிக்கிண்ணமும் இல்லை. அதில்பங்குகொண்ட வீரர்களும் சிலரில்லை என்ற நிலையில் போரின் தாக்கம் எதிரொலித்தது. மூன்றாவது போட்டிக்குப் புதிய வெற்றிக்கிண்ணம்: அதனை அன்பளிப்புச் செய்தவர் K.S.R போட்டோ உரிமையாளர் கதிரவேற்பிள்ளை சௌந்தரராசா, போட்டியில் வெற்றியைப் பதிவுசெய்து கொண்டது. அதிபர் திரு.அ. பங்கையற்செல்வன் அவர்கள் இப்போட்டியை மீள ஆரம்பிப்பதற்கு சிறப்பான ஒழுங்கை மேற்கொண்டிருநதார்.

2014 மே 02ஆம் நாள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நான்காவது வன்னியின் பெரும்போர் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மகா வித்தியாலத்தின் ஆதிக்கம் அதிகரித்தது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தோல்வியின் விளிம்பிற்குச் சென்று விடுமோ என்று பலரும் பேசிக்கொள்ள மழை, அதுவும் கனமழை, இரண்டாம் நாளில் மதிய உணவின் பின் ஆடுகளத்தின் ஈரலிப்பு போட்டியை சமனாக்கியது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வெற்றிக்கனவு தகர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஏப்ரல் 24ம் நாள் 05 ஆவது வன்னியின் பெரும்போர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 2016,2017,2018,2019 என இரு பாடசாலைகளுக்கும் இடையில் துடுப்பாட்ட போட்டி மைதான மாறுதல் கிரம அடிப்படையில் பாடசாலைகளினது ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. அப்போட்டிகளில் மூன்று சமநிலையில் முடிவுற்றிருந்தது.இருப்பினும் 2019ம் ஆண்டு நடைபெற்ற 9வது வன்னியின் பெரும் போர் துடுப்பாட்ட போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய வீரர்கள் ஆரம்பம் முதலே போட்டியை தமது கட்டுப்பாட்டில் கையகப்படுத்தி இருந்தமையினால்,புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய வீரர்கள் பெற்றுக்கொள்ளும் மூன்றாவது வெற்றி எனும் மகுடத்தினை சூடிக்கொண்டார்கள்.இதுவரையான காலப்பகுதியில் 9 'வன்னியின் பெரும்போர்" துடுப்பாட்ட போட்டிகள் நடைபெற்றிருக்கின்ற போதிலும் 5 சமநிலை போட்டிகளாகவும் 4 முடிவுகள் கிடைத்த போட்டிகளாக காணப்படுகின்றமை போட்டியின் விறுவிறுப்பு தன்மையினை மேலும் வலுப்பெறச்செய்துள்ளது.

2020,2021 ஆகிய காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் வைரஸ் பெருந்தொற்று அனைவரையும் அச்சுறுத்தியது மாத்திரமின்றி அனைத்து வழமையான செயற்பாடுகளினையும் முடக்கியதன் காரணமாக எமது 'வன்னியின் பெரும் போர்" துடுப்பாட்ட சமரினை நடாத்த இயலாமற்போனமை தவிர்க்க முடியாத ஒன்றே.இருந்த போதிலும் முழுமையான நோய்தொற்றில் இருந்து மீளாவிடினும் எமது பாடசாலைகளுக்கிடையிலான நட்புறவினை மீண்டும் பலப்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கினை கொண்டு 2021ம் ஆண்டிற்கான 10வது 'வன்னியின் பெரும்போர்" துடுப்பாட்ட நட்புக்கிண்ணத்தினை கிளிநொச்சி மகா வித்தியாலய பாடசாலை சமூகத்தினர் ஒழுங்கமைத்துள்ளார்கள்.அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மகா வித்தியாலய பாடசாலை சமூகத்திற்கு மகிழ்ச்சியும்,மன நிறைவையும் தரக்கூடிய போட்டியாகவே இதனை கருதவேண்டும்.ஏனெனில் நீண்ட கால பலரது உழைப்பினூடாக அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற சொந்த மைதானத்தில் இம்முறை போட்டிகள் நடைபெறுகின்றமையே.அத்துடன் சொந்த மைதானத்தில் போட்டி ஒழுங்கமைக்கப்பட்டமையானது இரு பாடசாலைச் சமூகத்திற்கும் இரட்டிப்பு மகிழ்சியினை அளிப்பது மாத்திரமல்லாமல் வரலாற்றுப்பதிவாகவும் குறிப்பிடக்கூடிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 th Encounter

# துடுப்பாட்ட போட்டிக்கான கிளிநொச்சி மகா வித்தியாலய அணியினர்



J.பிரவிந்தன்
(அணித்தலைவர்)



K.துவாரகன்
(உப அணித்தலைவர்)



S.மயூரன்



P.அபிசாந்



T.தினோசனன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்

## "வன்னியின் பெரும் போர்" துடுப்பாட்ட அணியினர் – 2021



மேல்வரிசை இடமிருந்து வலமாக: கு.சாத்வீகன், வ.அபிராம், ஜெ.கார்த்திகன், கு.சாரண்யன், பு.குபேரன், கே.பானுஜன், சி.ஆதிபன், ஜெ.அனுசியன் நடுவரிசை இடமிருந்து வலமாக: சி.மயூரன், ம.குயிலன், க.கதிர்ச்செல்வன், கி.டிலக்சன், வே.நிலவன், நா.கேசவன், த.டிதுசன், தெ.தினோசனான் , பி.அபிஷாந், அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: கோ.கிரிஷாந் (விளையாட்டுப் பயிற்றுனர்), சொ.தேவலிங்கம் (அணி முகாமையாளர்), செ.கரன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), க.உதயசீலன் ( பிரதி அதிபர்), யோ.பிரவிந்தன் (அணித்தலைவர்), ஜெ.தனபாலசிங்கம் (அதிபர்), க.துவாரகன் (உப அணித்தலைவர்), சு.இந்திராதேவி (பிரதி அதிபர்), து.ஜெயலலிதா (உதவி அதிபர்), ச.அலன்டிலன் (துடுப்பாட்டப் பயிற்றுனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



V.அபிராம்



K.சாரண்யன்



M.குயிலன்



T.டிதுசன்



V.நிலவன்



K.சாத்வீகன்



N.கேசவன்



K.டிலக்சன்



J.கார்த்திகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K.கதிர்ச்செல்வன்



N.அனுசியன்



K.பானுஜன்



P.குபேரன்



S.ஆதியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

## "வன்னியின் பெரும் போர்" துடுப்பாட்ட அணியினர் – 2021



முன்வரிசை இடமிருந்து வலமாக: தே.உதயநேசன் (தலைவர்), P.ஜெகதீஸ்வரன் (உதவி அதிபர்), ச.மகேந்திரராசா (பிரதி அதிபர்), சி.சிவகுமாரன் (உதவி அதிபர்), நேவீட் ஜீவராசா (அதிபர்), ப.றிசோத் (உடற்கல்வி ஆசிரியர்) A.ரதுர்ஜன் (பயிற்றுவிப்பாளர்), சா.தேனுஜன் (உபதலைவர்), இரண்டாம் வரிசை இடமிருந்து வலமாக: யூ.பற்றிக் , சி.தனுசாந், அ.ஜதுர்சன், பொ.விதுசன், ம.தேனுஜன், பி.தங்கநிலவன், த.தனுசன், க.லோஜிதன், வி.பருதி, டி.டிலக்சன், பா.அட்சயன், சி.திருக்சன், பா.கதிர்சியன், அ.வர்ணதீவன், அ.சானுஜன், உ.நர்மதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்ட போட்டிக்கான புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர்



T.உதயநேசன்
(அணித்தலைவர்)



S.தேனுஜன்
(உப அணித்தலைவர்)



P.விதுசன்



S.திருக்சன்



A.வர்ணஜீவன்



A.சானுஜன்



T.தனுசன்



J.பற்றிக்



V.பருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



U.நர்மதன்



P.அட்சயன்



M.தேனுஜன்



K.லோஜிதன்



S.தனுசாந்



P.கதிர்சன்



A.ஜதுர்சன்



D.டிலன்சன்




P.தங்கநிலவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K.M.V Vs P.C.C
# Match Summary-2019

K.M.V won by an innings and 41 runs
Venue-PPC Ground
Toss won by –K.M.V



**1st Innings-PCC**
Total -65
Wicket -10
KMV Bowling- S. Kobithan 6 Wickets
Yasikkumar 4 Wickets

**1st Innings-KMV**
Total -185
Wicket -10
Most runs -Yasikkumar 85 Runs
J.Piravinthan 21 Runs


**2nd Innings-PCC**
Total – 79
Wicket -10
Most runs -Rajtheeran 20 Runs
Tharshan 18 Runs
KMV Bowling- S. Kobithan 5 Wickets
Yasikkumar 3 Wickets

**Man of the match**-Yasikkumar
**Best all-rounder** -Yasikkumar
**Best batsman** -Yasikkumar
**Best bowler** -S. Kobithan
**Best fielder** -Rajtheeran





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 10 வது வன்னியின் பெரும் போரிற்கான நிதியனுசரணை.

பிரதான அனுசரணை-

- வேட்கை செயற்திட்டத்தின் ஊடாக பழைய மாணவர்கள் கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்

இணை அனுசரணையாளர்கள்-

- ROTARY CLUB OF KILINOCHCHI TOWN & HURU HARDWARE
- KVC நிறுவனத்தினர் கிளிநொச்சி விநியோகித்தர், HAPPY FEET விற்பனையகம்.
- MITHUSHAN –Kmv பழைய மாணவர்
- LIYONI–Kmv பழைய மாணவர் (அகரம் புத்தகசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் எண்ணத்திலிருந்து....

கொவிட் -19 வைரஸ் பெருந்தொற்றுக்காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக 'வன்னியின் பெரும் போர்"துடுப்பாட்டச்சமரினை நடாத்த முடியாமற்போனமையானது ஓர் பின்னடைவாக காணப்பட்ட போதிலும், பொருளாதாரச்சவால் மிகுந்த இக்காலப்பகுதியில் மீண்டும் இரு பாடசாலைகளுக்கிடையேயான நட்பினை பலப்படுத்தும் முகமாக அதே மிடுக்குடன் 10வது துடுப்பாட்டச்சமரினை நடாத்தியிருப்பதானது.எவ் நோக்கத்திற்காக இவ் நட்புக்கிண்ணம் ஆரம்பிக்கப்பட்டதோ..! அவ் நோக்கத்திற்கு புத்துணர்ச்சியளித்திருக்கும் செயற்பாடாகவே கருதுகின்றோம்.

நெருக்கடிமிகு காலப்பகுதியாக இருந்த போதிலும் மாணவர்களினது நலனினை மாத்திரம் முதன்மையாக கொண்டு புலம்பெயர் உறவுகள், உள்ளூர் உறவுகள் என இருதரப்பினரும் அனுசரணை வழங்கியிருப்ப தென்பது எம் இரு பாடசாலைகள் மீதும் அவர்கள் கொண்டுள்ள அக்கறையினதும்,நம்பிக்கையினதும் வெளிப்பாடாகும்.


சவால்கள் எவை வரினும் அவற்றையெல்லாம் கடந்து அனைவரது ஒன்றிணைவுடன் நட்புறவினை பிரதிபலிக்கும் வகையில் எதிர்வரும் வருடங்களிலும் 'வன்னியின் பெரும் போர்" சிறப்புற நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். பல இடர்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளின் ஊடாக குறுகிய காலப்பகுதியில் 10வது 'வன்னியின் பெரும்போர்" துடுப்பாட்ட போட்டியினை சிறப்புற ஒழுங்கமைத்து நாடாத்திய இரு பாடசாலை நிர்வாகம்,பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அனுசரணையாளர்கள் என அனைவருக்கும் எமது மலர்க்குழு சார்ந்த நன்றிகளையும் ,வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மலர்க்குழு,
வன்னியின் பெரும்போர் -2021
17.01.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org